திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் இருக்கின்ற குழந்தைகளுக்கு நபருக்கு என்ற முறையிலே கணக்கிட்டு காய் கறிக்குக் கொடுப்பது என்ற முறையை இப்பொழுதுவைத்திருக் கிறார்கள். நபர் ஒன்றுக்கு 5 கிராம் எண்ணெய் என்று வழங்கு கிறார்கள் என்று தெரிகிறது. அப்படி நபர் என்ற அடிப்படை யில் கணக்கிட்டுக் கொடுக்கின்றபொழுது எண்ணெயின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனால் அதேசமயத்தில் காய்கறி வாங்கவும், விறகு வாங்கவும் தொகை குறைவாக இருக்கிறது. இதனால் பலயிடங்களிலே எண்ணெயை விற்றுக்கூட காய்கறி களை வாங்குவதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, நபர் என்ற அடிப்படையில் கொடுப்பதைவிட, ஸ்லாப் முறையில் 50 பேருக்கு இவ்வளவு, 20 பேருக்கு இவ்வளவு என்ற கணக்கில் உணவுப் பொருட்களுக்குத் தொகையை வழங்குவார்களா ? மேலும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக சுருக்கமாகக் கேளுங்கள். மானியம் முடிந்து 15 நாட்கள்தான் ஆகின்றன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : எனவே, இந்த நபர் என்ற அடிப்படையை மாற்றி, ஸ்லாப் முறையைக் கொண்டுவருவது பற்றி அரசு ஆராயுமா ? அவ்வாறு செய்தால் இந்தத் திட்டத்திற்கு அது பயனுடையதாக இருக்கும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைத் துவக்குகின்ற பொழுது, இதை நபர் அடிப்படையிலே கொண்டு வருவதா அல்லது ஸ்லாப் அடிப்படையிலே கொண்டு வருவதா என்று வல்லுநர்கள் ஆய்வு செய்த பிறகுதான், நபர் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். எண்ணெய் தரப்படுவதைப் பொறுத்த வரையில் 5 கிராம் அல்ல, 3 கிராம் என்ற முறையில் வழங்கப்படுகிறது. அந்த 3 கிராம் என்பது மொத்தமாகத் தாளிக்கும்பொழுது போதுமானதாக இருக்குமே தவிர அதை விற்பதற்கான வழிவகை இல்லை.

ஆதிதிராவிடர் நலனுக்குச் சிறப்புத் திட்டம்.

639—(*வினா எண். 645) திரு. இரா. தாமரைக்கனி: மாண்பு மிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பஞ் சாயத்து யூனியனைத் தேர்ந்தெடுத்து அதில் வாழ்ந்துகொண்டிருக் கும் அரிசன மக்கள் பழங்குடி மக்களுக்காக வறுமைக்கோட்டைத் தாண்டி வளவாழ்வை நோக்கி நடைபோடச் செய்யும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ): அவை முன் விவர அறிக்கை **ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள், அவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் காமராஜ் மாவட்டத்தைச் சேர்ந்த எம். எல். ஏ. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில், ஆதி திராவிட மக்களுக்கு, 15 மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து அந்த மக்களுக்காக நல்வாழ்வுத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் என்னுடைய மாவட்டம் அதில் விடுபட்டுப் போய்விட்டது. காரணம் கேட்டால் புது மாவட்டம் என்று சொல்லுவார்கள். அது அதிகாரிகளுக்குத் தெரியாதா? இப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? எவ்வளவு ஒன்றியங்களை வருஷத்திற்குத் தேர்ந்தெடுக்கிறீர்கள்? இதை வைத்தாவது, வத்திராயிருப்பு ஒன்றியத்தை அங்கே அரிசன மக்கள் அதிகமாக வாழ்வதால் அதைத் தேர்ந்தெடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அது புதிதாக ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் விடுபட்டுப் போயிருக்கும். ஆனால் அதற்குமுன் ஒவ்வொரு ஆண்டும் 15 ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து,— தமிழகம் முழுவதும் தேர்ந்தெடுத்து—சிறப்பு நிதித் திட்டத்தின் மூலம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, இந்த ஆண்டு 1986—87-ல், அவருடைய ஒன்றியத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் 15 ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து, அவைமூலமாக, சிறப்பு மத்திய நிதி உதவியிலிருந்து, பல பலநோக்குத் திட்டங்கள், தயாரிக்கப்பட்டு அவைமூலம் பயன்படும் வகையில், இந்தத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக 1984—85ஆம் ஆண்டு எத்தனை ஆதி திராவிட மக்கள் பயன் அடைந்துள்ளார்கள்? இதற்காக அரசு எவ்வளவு செலவழித்துள்ளது? என்னுடைய மாவட்டத்தைப் புறக்கணித்த அந்த அதிகாரிமீது தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**142—144-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1986 மே 9]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைப் புறக்கணித்ததைப் போல உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியல்ல. அது விடப்பட்டிருக்கும். இந்த ஆண்டு சேர்க்கப்படும். 1983–84-ஆம் ஆண்டு, ரூ. 8,12,000 செலவில் 9.719 பேர்கள் இதன் மூலமாகப் பயன் அடைந்திருக்கிறார்கள். 1984–85-ல், ரூ. 5,59,000 செலவில் 7,025 பேர்கள் பயன் அடைகின்ற சூழ்நிலையில் அந்த மக்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக, குறிப்பாக, ஆதி திராவிடர்கள் ஆயிரம் குடும்பங்கள் பயன் அடைகின்ற வகையில்தான் இந்தத் திட்டங்கள் செயல்படுகின்ற நிலைமையிருக்கின்றது. ஆதி திராவிடர்கள் ஆயிரம் பேர்கள் இருந்தால்தான் அந்த ஒன்றியத்தை கிளஸ்டர் வில்லேஜாக தேர்ந்தெடுத்து அதன்மூலம் இந்தத் திட்டம் செயலாக்கப்படும் சூழ்நிலையிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகாரி மீது அன்டச்சபிலிட்டி சட்டத்தின்கீழ் வழக்கு போடப்படுமா என்று கேட்டார்கள். அதிகாரி, புறக்கணிக்கிற நிலையில் எதுவும் செய்யவில்லை. இந்த ஆண்டு, அந்தத் திட்டம் செயல்படுவது குறிப்பிட்ட இடத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85-ல் ஆண்டு இந்த கிளஸ்டர் திட்டத்தின் மூலமாக, நிலக்கோட்டை எடுக்கப்பட்டது. அங்கே 10 இடங்களில், கிட்டத்தட்ட, ரூ. 2–3/4 இலட்சத்தில் ஒரு கட்டிடம், ரூ. 1–3/4 இலட்சத்தில ஒரு கட்டிடம், ஆக, ரூ. 41/2 இலட்சம் செலவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டு இன்னும் சரியான முறையிலே, முடிவு பெறாமல் இருக்கிறது. ஒவ்வொரு யூனியனிலும் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள கிட்டத்தட்ட ஆயிரம் மக்களுக்கு மத்திய அரசு நிதியுதவியின் மூலமாக, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. துரிதமாக அந்த மக்களைத் தேர்ந்தெடுத்து, விரைவிலே அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை ஏற்று, விரைவிலே செயல்படுத்த ஆவன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பொம்மியன்பட்டி ஆதிதிராவிடர்களுக்குக் குடியிருப்புகள்.

திரு. செ செம்மலை —*640 * வினா எண் 5179

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கிழ்க்கண்ட வினாக்ளுக்கு விடையளிப்பாரா—